RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1862

# விவிலியத்தில் பெண் மரபு போற்றல்

சு. ராதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி-628503, தமிழ்நாடு, இந்தியா.

# Women's Legacy in the Bible

S. Radha [a, *]

[a] Department of Tamil, Government Arts & Science College, Kovilpatti-628503, Tamil Nadu, India

* Corresponding Author: santhanamradha2011@gmail.com

Received: 20-08-2022
Revised: 29-09-2022
Accepted: 17-10-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

Every poet and storyteller sing a poem and writes story comparing women to Pushpam, means flower. There are many kinds of flowers, each with different speciality. Their colours and smells are different. Similarly, every woman created by God has different qualities and nature. Even in the Bible, each story portrays women in a different form with different characteristics. But only some flowers attract human attention. Many kind of flowers that grow in the forest bloom and wither, no one is there to take care of it. No one enjoys its beauty, and no one consumes its fragrance. However, God does not refuse to give beauty and fragrance to it. The Lord Jesus Christ tells us to observe how the wild flowers grow. If God takes care of them, will He not take care of humans? Every woman in the scripture's blossoms like a flow and God uses them for a good purpose. This article explains about the women's legacy in the Bible

**Keywords:** Bible, Women, Legacy, Flower, Nature

## முன்னுரை

"குணசாலியான ஸ்திரீயை கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் இப்படிப்பட்ட பெண்களின் பண்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன (BSI, 2003). அவற்றைச் சுருக்கி கூற வேண்டுமாயின், அவள் ஒரு வியாபாரக் கப்பலைப் போல் எக்காலத்திலும் சுறுசுறுப்புடன் இயங்கி, தன் கணவனுக்கும், தன் குடும்பத்தினருக்கும் தேவையான யாவற்றையும் திறமையுடன் செய்து முடிப்பதுமின்றித் தன் வாயை ஞானம் விளங்க திறந்து தயையுள்ள போதகம் செய்கிறாள். இதனால் அவளுடைய புருஷனுடைய இருதயம் அவளை நம்பும். அவளும் தன் புருஷனுக்கு கிரீடமாய் இருக்கிறாள் (BSI, 2003). அவளுடைய பிள்ளைகள் அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவளது புருஷனும் அவளைப் பார்த்து புகழ்கிறான். இந்த வரிசையில் நாம் அநேகரைக் காணலாம். அப்படிப்பட்ட பெண்களை பற்றி இனி பார்ப்போம்.

## இயேசுவின் தாயாகிய மரியாள்

வேத புத்தகத்தில் உள்ள பெண்கள் அனைவரிலும், அநேகரிடமிருந்து வாழ்த்துரைகள் பெற்றவள் மரியாள் மட்டுமே. தேவதூதன் அவளைச் சந்தித்து சொன்ன வாழ்த்தொலி "கிருபை பெற்றவளே வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்" என்பதே. மரியாள் தன் சொந்தக்காரியான எலிசபெத்தை காணச் சென்றபோது எலிசபெத் அவளை வாழ்த்தினாள்." ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்".

மரியாளே தேவனைத் துதித்து பாடுகையில் "இதோ இது முதல் எல்லாத் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்றாள் (BSI, 2003).

அன்றிலிருந்து இன்றுவரை உலகில் தோன்றிய பெண்கள் எல்லோரை விடவும் ஆசீர்வதிக்கப்பட்டவளாகவும் மரியாள் கருதப்படுகிறாள். ஏனெனில் பரிசுத்தமான தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை வயிற்றில் சுமந்து ஈன்றெடுத்தாள் அவள்.

தேவதூதன் மரியாளிடம் வந்து "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக" எனக் கூறினான். அப்பொழுது அவள் "இது எப்படியாகும் புருஷனை அரியேனே" என்றாள். அதற்குத் தூதன் "பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் குழந்தை பரிசுத்தமுள்ள தேவகுமாரன் என எண்ணப்படுவார்" என்றான். உடனே அவள் தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தாள். இந்த பரிசுத்த தாயைப் போல நாமும் தேவ சித்தம் நிறைவேற நமது முழுவாழ்க்கையையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்து ஜீவிப்போம் (Amirthabai Sanniyasini, 2012).

## யெப்தாவின் மகள்

இவள் ஒரு வாலிப பெண். நன்றாக நடனம் ஆடுவாள். தம்புரு என்னும் இசைக்கருவியையும் மீட்டுவாள். யெப்தா என்னும் நியாயாதிபதியின் ஒரே செல்ல மகள். அன்று அவள் அவளுக்கிருந்த அழகிய பல வர்ண உடைகளில் மிகவும் சிறந்ததை எடுத்து உடுத்திக் கொண்டாள். தன் தோழிகளையும் அவ்வாறே உடையணியச் சொன்னாள். ஏனெனில் தன் தகப்பன் போர்க்களத்திலே அம்மோன் புத்திரர்களை வென்று வெற்றி வாகைச் சூடி ஊர் திரும்பிக் கொண்டிருந்தான். வெற்றி வேந்தனாய் வரும் அருமைத் தகப்பனை எதிர்கொண்டு வரவேற்க ஆவலுடன் ஓடி வந்தாள் அருமை மகள்.

அடுத்ததாக நடந்த நிகழ்ச்சியை கண்டு அவள் ஸ்தம்பித்து நின்றாள். ஏனெனில் தகப்பனாகிய யெப்தாவின் முகம் பேயறைந்தது போன்றிருந்தது. தன் மகளைப் பார்த்தவன், தன் வஸ்திரங்களைக் கிழித்து " ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும், கலங்கவும் பண்ணுகிறாயே, நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன், அதை மாற்றக் கூடாது என்றான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த மகளுக்கும் அங்குள்ள மக்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. காரணம் என்னவென்றால் அவன் போருக்கு புறப்படும் முன் தேவனை நோக்கி ஜெபம் பண்ணினான். அவனுக்கு தேவன் செவி சாய்த்தார்." கர்த்தருடைய ஆவி யெப்தாவின் மேல் இறங்கினார் " (நியாயாதிபதிகள்11:29) அந்த "தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக் கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால் நான் திரும்பி வரும்போது என் வீட்டு வாசற்படியில் இருந்து எனக்கு எதிர் கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன்" என்றான்.

இதுவே அவன் கதறலுக்குக் காரணம். வீட்டு வாசற்படியிலிருந்து அவனுக்கு எதிர் கொண்டு வந்தது வேறு "எதுவுமல்ல" அவனுடைய ஒரே மகள் தான். பொருத்தனையை நிறைவேற்ற வேண்டுமே. சர்வாங்க தகனபலியாக அவளை பழி செலுத்த வேண்டுமே! உடனே அவள் அவனிடம் "என் தகப்பனே நீர் பொருத்தனைச் செய்தபடியே எனக்கு செய்யும்" என்று தன்னை கர்த்தருக்காக ஒப்புக் கொடுத்தாள்.

இந்த யெப்தாவின் மகளைப் போல் ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் பெற்றோருக்கு அடங்கி தந்தையின் மீதுள்ள விசுவாசத்தால் அவனது பொருத்தனையை ஏற்றுத் தன்னைத் தீயாக பலியாக ஒப்புக் கொடுத்தது போல் நாம் நம் பொருத்தனைகளை நிறைவேற்றுவோம். ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவோம் (Sheela Phatak, 2020).

## சூனேமியாள்

விருந்தோம்பல் என்பது தொன்றுதொட்டு ஒவ்வொரு குடும்பத்திலும் வழங்கிவரும் ஒரு பண்பாடு. அந்த விருந்தோம்பலைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை நாம் பார்ப்போம்.

"அந்நியரை உபசரிக்க நாடுங்கள், அன்னியரை உபசரிக்க மறவாதிருங்கள், முறுமுறுப்பில்லாமல் ஒருவரை ஒருவர் உபசரியுங்கள்" (BSI, 2003). இந்த சூனேமியாள் ஒரு ஏழை மனிதனை உபசரித்தாள். அவள் வேதாகமத்தில் ஒரு இடத்தை பெற்றுக் கொண்டாள். சூனேம் ஊரைச் சேர்ந்தவளானதால் சூனேமியாள் என்று அழைக்கப்பட்டாள். இவளுடைய பெயர் என்னவென்று தெரியவில்லை." கனம்பொருந்திய இஸ்திரி" என்றும் சொல்லப்படுகிறாள். நல்ல வசதி வாய்ந்தவளாக இருக்க வேண்டும்.

எலிசா தீர்க்கதரிசி அடிக்கடி சூனேமுக்கு வருவான். ஒருநாள் அவனை தன் வீட்டுக்கு அழைத்து சூனேமியாள் சாப்பாடு கொடுத்தாள். ஒவ்வொரு தடவை சூனேமுக்கு எலிசா வரும்போதும் சூனேமியால் வீட்டில் சாப்பிடுவான். ஆகவே அவள் தன்னுடைய புருஷனிடம் கலந்தாலோசித்து அவளுடைய வீட்டின் மாடியில் ஒரு சிறு அறையைக் கட்டி அங்கு ஒரு கட்டிலும், மேஜையும், விளக்கும் வைத்தாள். இப்போது எலிசா அங்கு தங்குவது வழக்கமாயிற்று.

இப்படி அக்கறையுடன் தன்னைக் கவனித்துக் கொள்ளும் இந்தப் பெண்ணுக்கு ஏதாவது நாம் செய்ய வேண்டும் என்று எண்ணினான். தன் உதவியாளான கேயாசியை அழைத்து அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு வா என்றான். அதற்கு அவள் "என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கிறேன்" என்றாள். எனக்கு எந்த குறையும் இல்லை என்றாள். ஆனால் அவளுக்கு ஒரு குறை இருந்தது. அது என்னவென்றால் அவளுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. ஆனாலும் அவள் அவனிடம் நான் நன்றாக இருக்கிறேன் என்கிறாள். இதை அறிந்துகொண்ட எலிசா அவளிடம் அவளுக்கு ஒரு மகன் பிறக்கப் போவதாக அறிவித்தான். சூனேமியாளுக்கு ஒரே ஆச்சரியம், அதிர்ச்சி. இதை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை "ஏது தேவனுடைய மனுஷனாகி என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம். எலிசா சொன்ன படியே ஒரு மகனை ஈன்றாள்.

சூனேமியாளின் குழந்தை வளர்ந்தான். ஒருநாள் திடீரென்று அவன் இறந்துபோனான். பெற்ற தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. காலையில் நன்றாகக் இருந்த பிள்ளை மத்தியானம் மரித்துப் போனான்." தலை நோகிறது" என்று மாத்திரமே சொன்னான். மரித்துப் போகும் அளவுக்கு வேறு எந்த தீராத வியாதியும் இல்லை.

இறந்த மகனை எலிசாவின் படுக்கையில் படுக்க வைத்தாள். வீட்டைப் பூட்டினாள். நேராக எலிசாவைக் காணச்சென்றாள். நேராக எலிசாவிடம் வந்தவள் குனிந்து அவனுடைய கால்களைப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய மனதின் பாரத்தை அந்த நிமிடமே அறிந்துகொண்டார்.

"நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரனை வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்று நான் சொல்லவில்லையா? என்று வேதனையுடன் கேட்டாள்.

எலிசா எழுந்து பிள்ளையின் வீட்டுக்குப் போனான். பிள்ளை இருந்த அறைக்குச் சென்று கதவை மூடி கர்த்தரை நோக்கி ஜெபித்தான். பின்பு பிள்ளையின் மீது குப்புறப்படுத்தான். பிறகு எழுந்து சற்று நேரம் கழித்து திரும்பவும் அப்படியே படுத்தான். பிள்ளை உயிர் பெற்று எழுந்தான். சூனேமியாளின் மகிழ்ச்சிக்கு அளவுண்டா? குணசாலியான ஸ்திரீயைப் பற்றி வாசிக்கும்போது "சிறுமையானவர்களுக்குத் தன் கையை திறந்து ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டிகிறாள்" என்ற வசனத்தின் மூலம் நாம் அறியலாம். சூனேமியாளிடமும் இந்த நல்ல குணம் காணப்பட்டதால் அவள் "கணம் பொருந்திய ஸ்திரீ" மட்டுமல்ல குணசாலியான இஸ்திரியும் ஆவாள் என்றால் அது மிகையாகாது (BSI, 2003).

## முடிவுரை

பெண் என்பவள், விசேஷித்தவள். ஆணை மண்ணினால் உருவாக்கின தேவன் அவன் எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கினார். மண்ணை விட எலும்பிற்கு வலிமை அதிகமாக இருப்பதினால் பெண் எதையும் பொறுமையாக தாங்கக் கூடியவளாகவும், எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உடையவளாகவும் விளங்குகிறாள். நாட்டை ஆளும் ராஜாவுக்கு அறிவுள்ள மந்திரியினால்

நாடு செழித்தோங்குவது போல கணவனுக்கு நல் ஆலோசனை சொல்லும் மனைவியினால் வீடும் செழித்தோங்குகிறது. இதனால் திருச்சபையும், சமுதாயமும், நாடும் பலனடைகிறது. தன்னலமற்ற பெண்ணே, உலகில் சிறந்த பெண் ஆவாள். பெண் இல்லாத வீடும், வேலி இல்லாத நிலமும் ஒன்றாகவே கருதப்படும். ஸ்திரீயானவள் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்கின்ற அளவுக்கு நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும். வேத காலத்தில் பெண்கள் இப்படியெல்லாம் வாழ்ந்தார்களா! என்று ஆச்சரியப்பட வைக்கிறது இக்கட்டுரை. எனவே இவர்களை போல் நாமும் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற குணங்களால் நம்மை அலங்கரித்தோமானால் வயதான காலத்தில் அந்தக் குணங்களால் இன்னும் அழகாக மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான பெண்களாகத் திகழ்வோம்.

## References


Amirthabai Sanniyasini, (2012) Parisutha Vedhakamathin 101 Penmanikal, Bethel Ashram Kanyakumari, India.

BSI, (2003) Holy Bible, Bible Society of India, Bangalore, India.

Sheela Phatak, (2020) kaattu pushpangalaip paarungal, Annai Nilayam, Sivakasi, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License